# தொழில் புரட்சி தொடர்வோம்..




முதல்வர் கலைஞர்

# தொழில் புரட்சி தொடர்வோம்...

தி.மு.க. அறக்கட
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவா

## முதல்வர் கலைஞர்

தலைமைக் கழக வெளியீடு:

**திராவிட முன்னேற்றக் கழகம்**

"அண்ணா அறிவாலயம்"
367 & 369, அண்ணா சாலை,
சென்னை - 600 018.

முதற்பதிப்பு : செப்டம்பர் 2006.

விலை : **ரூ. 5/–**

27256

அச்சிட்டோர் : மாருதி பிரஸ்,
174, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

# முதல்வர் கலைஞர் அவர்கள்
# 23.8.2006 அன்று தமிழக சட்டப்பேரவையில் தொழில்துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை மானிய விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை குறித்தும், தகவல் தொழில் நுட்பத் துறை குறித்தும், காலையிலே இருந்து இது வரையிலே இந்த மாமன்றத்திலே பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள், தலைவர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

எனக்கு முன்னால் பேசிய அ.தி.மு.க. உறுப்பினர் கூறியது போல ஏதோ நானும் தட்டுத் தடுமாறி என்னுடைய பதிலுரையை தருவதற்கு முன் வந்திருக்கிறேன். எல்லோருக்கும் தட்டுத் தடுமாறுகின்ற பருவம் வரும், அதை யாரும் தவிர்க்க முடியாது. நான் அவைகளையெல்லாம் கேலியாகவோ, கிண்டலாகவோ, வசையாகவோ கருதுபவன் அல்ல. இசையாகவே கருதிக் கொண்டு ரசிப்பவன்.

என்னுடைய உடல்நிலை காரணமாக நீண்ட நேரம் இந்த விவாதத்திலே கலந்து கொள்வதற்கு இயலாது என்பதற்காக முதலில் பட்டியலிடப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஒரு சிறிது மாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டு எதிர்க்கட்சியின் துணைத் தலைவர், கொறடா இவர்களுடைய ஒப்புதலோடு, தேதி மாற்றம் செய்யப்பட்டு, இன்றைக்குக் கூட அதே உடல் நிலையோடுதான் சில கருத்துகளை எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பை இங்கே நான் பெற்றிருக்கின்றேன்.

இது தற்காலிகமாக ஏற்பட்டிருக்கின்ற ஒரு நலிவு. யாரும் நிரந்தரமாக இருக்கக்கூடிய உடல்நலிவு என்று எண்ணி

ஆறுதலடையமாட்டார்கள், அகமகிழ்ச்சி கொள்ள மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இன்று இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்தவர் நம்முடைய நண்பர், உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள். அவர்கள் பேசும் பொழுது முதல் இடம் பற்றிக் கேட்டார்கள் சென்டர் ஃபார் மானிட்டரிங் இண்டியன் எகானமி, (சி.எம்.ஐ.இ.) பிப்ரவரி 2006ஆம் ஆண்டு விவரப்படி இன்வெஸ்ட்மெண்ட் இன் மேனுபாக்சரிங் செக்டார் என்ற தலைப்பில் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள்.

உற்பத்தித் துறையிலே அம்மையார் ஜெயலலிதாவினுடைய ஆட்சிதான் முதல் இடத்தில் இருந்ததாகச் சொன்னார்கள். என்னுடைய கையிலே அதற்கு ஆதாரமான சி.எம்.ஐ.இ. வெளியிட்ட இரண்டு புத்தகங்களை வைத்திருக்கின்றேன். அந்தப் புத்தகத்திலே உள்ள ஆதாரங்களை, புள்ளிவிவரங்களை வைத்துத்தான் நான் இந்தக் கருத்தை எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கின்றேன். நான் முதலிலே சொன்னபடி சென்டர் ஃபார் மானிட்டரின் இண்டியன் எகனாமி, (சி.எம்.ஐ.இ.) பிப்ரவரி 2006 விவரப்படி –

ஒரிசாவிலே 1 லட்சத்து 76 ஆயிரத்து 270 கோடி ரூபாய் உற்பத்தித் துறையில் முதலீடு.

ஜார்க்கண்ட் 1 லட்சத்து 70 ஆயிரத்து 460 கோடி ரூபாய்.

குஜராத் 96 ஆயிரத்து 162 கோடி ரூபாய்.

கர்நாடகா 55 ஆயிரத்து 485 கோடி ரூபாய்.

ஆந்திரா 55 ஆயிரத்து 359 கோடி ரூபாய்.

தமிழ்நாடு 54 ஆயிரத்து 488 கோடி ரூபாய்.

வரிசைப்படி ஆறாவது இடத்திலேதான் அம்மையார் அவர்கள் ஆண்ட காலத்தில் தமிழகம் அமைந்திருக்கிறது.

ஆனால், இங்கே முதலிடம் பெற்றிருந்ததாக நண்பர்கள் வாதிட்டிருக்கின்றார்கள். இன்னொரு ஆதாரத்தையும் சொல்கிறேன்.

3

# கழக ஆட்சியில் தொழில்துறையில் தமிழ்நாடு முதலிடம்

தி.மு.கழக ஆட்சியிலே என்ன நிலை என்றால். 2001 என்று எடுத்துக்கொள்ள வேண்டும். 2001 ஆம் ஆண்டு முடிவில் தி.மு.கழக ஆட்சி நடந்த அன்றைய நிலையில் அந்தக் காலகட்டத்தில்,

ஒரிசாவிலே 23 ஆயிரத்து 366 கோடி ரூபாய்.

ஜார்க்கண்ட் வெறும் 731 கோடி ரூபாய்.

குஜராத் 36 ஆயிரத்து 58 கோடி ரூபாய்.

கர்நாடகா 27 ஆயிரத்து 545 கோடி ரூபாய்.

ஆந்திரா 34 ஆயிரத்து 928 கோடி ரூபாய்.

மராட்டியம் 26 ஆயிரத்து 218 கோடி ரூபாய்.

தமிழ்நாடு 36 ஆயிரத்து 778 கோடி ரூபாய்.

ஆக, அன்றைய நிலையில் தமிழ்நாடுதான் முதல் இடத்திலே இருந்தது என்பதை தெளிவாக புரிந்துகொள்ளலாம்.

நான் இந்தப் 'போட்டா போட்டி', 'காட்டா குஸ்தி'யில் என்னை சிக்க வைத்துக் கொள்ள விரும்பவில்லை. இங்கு நாம் எல்லோரும் அமர்ந்து, இந்த மாமன்றத்தில் தமிழ்நாட்டினுடைய மொத்த தொழில் வளத்தை வளர்ப்பதற்கு பணியாற்ற வேண்டும். பாடுபட வேண்டும். ஆர்வம் கொள்ள வேண்டும். அக்கறை காட்ட வேண்டும் என்ற அளவிலேதான் இன்றைய விவாதம் அமைந்து, உங்களுடைய உரைகளும், என்னுடைய பதில் உரையும் அவ்வாறு விளங்கிட வேண்டும் என்றே நான் கருதுகின்றேன். இதற்கிடையிலே இதற்கெல்லாம் யார் காரணம் நீயா? நானா? என்ற அந்த விவாதத்திற்குள் நான் செல்ல வேண்டிய தேவையில்லை. வம்புக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை. வந்த வம்பை விடவும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால் வந்த வம்பை விட்டு விட்டால், வழங்க வேண்டிய விளக்கத்தை வழங்காமல் போய் விடக்கூடும். அதனால்தான் சொல்கிறேன். விளக்கம் தேவைப்படுகின்ற நேரத்தில் தந்தே தீரவேண்டிய நிலையில் இருப்பதால் தான் அந்தக் கருத்தை சொன்னேனேயல்லாமல் வேறல்ல.

ஜெயக்குமார் அவர்கள் இன்னொன்றை சொன்னார்கள். தொழில்துறை மான்ய ஒதுக்கீடு கடந்த ஆண்டைவிட குறைந்துவிட்டது என்று குறிப்பிட்டார்கள். பத்திரிகைகளுக்கு பெரும் தலைப்பு. அவர் நீண்டகாலமாக சட்டமன்ற அனுபவம் உள்ளவர் என்பதும் அதைப்போலவே பத்திரிகைத்துறையிலே சற்று அனுபவம் உள்ளவர் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். அவர் தொழில்துறை மான்யம் கடந்த ஆண்டைவிட குறைந்து விட்டதாக குற்றம்சாட்டினார். 2005– 2006ல் திருத்திய மதிப்பீடு 227 கோடி ரூபாய் என்ற போதிலும், Final Modified Appropriation இறுதி திருத்த ஒதுக்கீடு என்று பார்த்தபொழுது 186 கோடி ரூபாய்தான். ஆனால், சொல்லப்பட்டது 227 கோடி. இறுதி திருத்த ஒதுக்கீடு என்று குறிப்பிடப்பட்டது. 186 கோடி. அதாவது 40 கோடி ரூபாய் கடந்த ஆட்சியில் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்பட்டுவிட்டது. இந்த சரண்டர் எனக்குப் பிடிக்காது (மேசையைத் தட்டும் ஒலி). அதனால்தான், அந்த கணக்கின் அடிப்படையில்தான், தற்போது கடந்த ஆண்டை விட அதிகமாகவே ஒதுக்கிய நிதியின் மொத்தமாக 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஜெயக்குமார் அவர்களுடைய சந்தேகத்திற்கு, கேள்விக்கு இதை நான் விளக்கமாகத் தருகிறேன். ஏதோ அவருக்கு பதிலுக்குப் பதில் சொல்வதாக அவரும் கருதிக் கொள்ளக் கூடாது. விளக்கம்தான்.

தமிழ்நாடு; உற்பத்தித் துறை முதலீட்டில் கடந்த ஆட்சியில் முதல் மாநிலமாக திகழ்ந்தது என்ற வாதமும் அடிபட்டுப் போகின்ற புள்ளிவிவரங்களை எடுத்து வைத்திருக்கின்றேன். Annual Survey of Industries 2003–2004 இல் வெளிவந்துள்ள விவரப்படி

Fixed Capital என்ற தலைப்பில்

மராட்டியத்தில் 83 ஆயிரத்து 472 கோடி ரூபாய்.

குஜராத்தில் 85 ஆயிரத்து 788 கோடி ரூபாய்.

தமிழ்நாட்டில் 46 ஆயிரத்து 421 கோடி ரூபாய் 2004ன் விவரப்படி.

Invested Capital என்ற தலைப்பில் மராட்டியத்தில் 1 லட்சத்து 24 ஆயிரத்து 19 கோடி ரூபாய்.

குஜராத்தில் 1 லட்சத்து 15 ஆயிரத்து 27 கோடி ரூபாய்.

தமிழ்நாட்டில் 68 ஆயிரத்து 330 கோடி ரூபாய்.

எனவே, எப்படி தமிழ்நாடு இவற்றில் எல்லாம் முதல் நிலையில் இருக்க முடியும் என்ற கேள்விக்கு நாமே பதிலை தேடிக் கொள்ளவேண்டும். இன்னொன்றும் கேட்டார்கள். எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல திட்டத்திற்கு 900 கோடி ரூபாய் என்றும், கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு பொருளாதார மண்டல திட்டத்திற்கு 500 கோடி ரூபாய் என்றும், நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா திட்டத்திற்கு 640 கோடி ரூபாய் என்றும்; செலவாகும் எனக் குறிப்பிட்டுவிட்டு அதற்கான 2ஆயிரத்து 40 கோடி ரூபாய் நிதியை – நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யவில்லையே ஏன்? என்று கேட்டார். எடுத்த எடுப்பிலே மேலெழுந்த வாரியாக பார்க்கும் பொழுது சரியான கேள்வி என்றுதான் தோன்றும். ஆனால், அது சரியான கேள்வி அல்ல என்று அதை மறுத்து நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆனால், விளக்கமளிக்க விரும்புகின்றேன். இவற்றுக்கெல்லாம் தேவைப்படும் நிதி, பங்கு முதலீடுகள் மூலமாகவும், கடனாகப் பெறுவதன் மூலமாகவும் திரட்டப்படும். பங்கு முதலீடுகள் மூலமாக ஏற்படும் ஈவுத்தொகை (Equity) சிறிய பகுதியே ஆகும். இதனை இந்தத் திட்டங்களை நிறைவேற்றவுள்ள டிட்கோ நிறுவனம் ஏற்றுக் கொள்ளும். தேவைப்படும் நிதியின் பெரும்பகுதி வங்கி களிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடனாகப் பெறப்படும். பொதுவாக இதுபோன்ற திட்டங்களுக் கெல்லாம் இந்த முறையில்தான் நிதிக்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை அமைச்சராகப் பணியாற்றிய ஜெயக்குமார் அவர்கள் நன்றாகவே அறிவார்கள் என்று கருதுகிறேன். இது எல்லா ஆட்சிக் காலங்களிலும் பின்பற்றப்பட்டு வரும் வழிமுறை ஆகும்.

இங்கே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்ட மன்றக் கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினர்கள். கடந்த ஆட்சியில் அஸ்வந்த் சுகர்ஸ் என்ற நிறுவனத்தில் நடைபெற்ற விதி மீறல்கள், முறைகேடுகள் தொடர்பாக அந்த நிறுவனத்தின் பின்னணியிலே இருப்பவர்கள் யார்? யார்? என்ன நடவடிக்கை? என்றெல்லாம் கேட்டார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன். ஏனென்றால் அவர்களுக்கு ஏதாவது உறுதியளிக்கவேண்டும். நேற்றைக்கே கோபம் வந்துவிட்டது அல்லவா. ஆகவே, இதற்கு உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு ஒளிந்திருக்கும் உண்மைகளை வெளிச்சத்திற்கு நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்பதை மாத்திரம் காங்கிரஸ் கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே இந்த இரண்டு தலைப்புகளிலும் தொழிற்துறை, தகவல் தொழில்நுட்பத் துறை என்ற இரண்டு தலைப்புகளிலும் மொத்தம் 285 வெட்டுத் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நானும் 1957ஆம் ஆண்டிலிருந்து இந்த அவையிலே இருக்கிறேன். பேராசிரியரும், 57லிலே என்னோடு இருந்தார். பின்னர் பார்லிமெண்ட்டுக்கு சென்றுவிட்டு இங்கே வந்தார். தொடர்ச்சியாக 57ஆம் ஆண்டிலிருந்து இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்றேன். இவ்வளவு வெட்டுத் தீர்மானங்களை நான் பார்த்ததில்லை. அவர்கள்கூட சொன்னார்கள் இங்கே, மான்யங்களுக்கான விவாதங்களைத் தொடங்குவதற்கு முன்பு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருப்பவர்களின் பெயர்களைச் சொல்ல எழுந்து நின்று பள்ளிக் கூடங்களிலே ‘அட்டன்டெண்ஸ்’ எடுப்பதைப்போல, கேட்பதும், ‘உள்ளேன் ஐயா’ என்று உறுப்பினர்கள் சொல்வதுமாக நடைபெறுகிறது.

இந்த இரண்டு மான்யங்களில் மாத்திரம் 285 வெட்டுத் தீர்மானங்கள். ஆனால், அந்த 285–ல் இருப்பவைகள் எல்லாம்

அரசுக்கு அல்லது இந்த இலாகாவில் ஈடுபட்டிருக்கின்ற எனக்கு நினைவூட்டுகின்ற, கவனப்படுத்துகின்ற பல வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. குறிப்பாக, சிலவற்றை மாத்திரம் நான் இங்கே நினைவூட்டினால், சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். இல்லாவிட்டால், அந்த வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் 'வெட்டி'த் தீர்மானங்களாக ஆகிவிடும். எனவே, சிலவற்றை மாத்திரம் நினைவூட்ட விரும்புகிறேன். கட்சிச் சார்பில்லாமல் பொதுவான முறையில், யார் யார் தந்திருக் கிறார்களோ அவர்களது பெயர்களைக் குறிப்பிட்டு அந்தக் கருத்துக்களைச் சொல்லி, அதற்கான விளக்கங்களை விவரங்களை கூற விரும்புகின்றேன்.

செல்வி.செ.பாலபாரதி (சி.பி.எம்.) அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திண்டுக்கல் தொகுதியில் ஜவுளி ஏற்றுமதி வளாகம் – ஜவுளி பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது பத்திரிகைகளில் வரும் – வாக்காளப் பெருமக்கள் படித்துப் பார்த்து வாழ்த்துவார்கள் – இதைப்பற்றி பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.நன்மாறன் (சி.பி.எம்) – மதுரை மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் உருவாக வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறார். மாவட்ட ரீதியான ஆய்வுகள் வரும் போது, இதுவும் ஆய்வு செய்யப்பட்டு இணைக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டாக்டர் என்.கே.விஷ்ணுபிரசாத் (காங்கிரஸ்) – செய்யாறில் இந்த ஆண்டிலேயே சிப்காட் தொழிற்பேட்டை துவங்கப்பட்டு செயற்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று

கேட்டிருக்கிறார். நான் அவருக்குச் சொல்கிறேன் – சிப்காட் இராணிப்பேட்டையில் இருக்கிறது. இராணிப்பேட்டைக்கும் செய்யாறுக்கும் அதிகத் தொலைவில்லை. அங்கிருக்கிற தொழிற்சாலைகள் செய்யாறு வரையிலே வரலாம். தொழில் செய்யக் கூடியவர்களுக்கு. இராணிப்பேட்டை என்ன எங்கிருந்தாலும் வரும் – 'செய்யார்' என்றால்தான் வராது. எனவே விஷ்ணுபிரசாத் அவர்களுக்கு நான் உறுதியளிக்கின்றேன் – இராணிப்பேட்டையிலே தொழில்கள் வைப்பதற்கு இடமில்லாத அளவிற்கு மிதமிஞ்சி நின்றால், செய்யாறுக்கு நிச்சயமாக சிப்காட் தொழிற்பேட்டை வருவதற்கு வழிவகுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கின்றேன்.

வேல்முருகன் (பா.ம.க.) – பண்ருட்டியிலே பலாப் பழம் ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலை கேட்கிறார். அதோடு விடவில்லை – முந்திரி பழ ஜூஸ் தயாரிக்கும் தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டிருக்கிறார் – முந்திரி ஜூஸ், பலாப்பழ ஜூஸ் கேட்கிறார். மாம்பழ ஜூஸ் கேட்கவில்லை – கேட்கவேண்டியவர் தேர்தல் சின்னத்தின்படி கேட்கவில்லை (பலத்த சிரிப்பு) அந்த இரண்டு ஜூசும் பிழிவதற்கான ஏற்பாடுகளை அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்போரூர் சட்டமன்ற தொகுதியில் அடங்கியுள்ள மறைமலைநகர் தொழிற்பேட்டையில் பெரும்பாலான தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க டி.மூர்த்தி (பா.ம.க.) வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார் – தொழிலை மாத்திரம் கவனித்தால் போதாது – அந்த தொழிலை வாழ வைத்துக் கொண்டிருக்கிற தொழிலாளர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற கவலை உள்ள அரசு நிச்சயமாக – அதையும் கவனிக்கும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

கம்பம் இராமகிருஷ்ணன் (ம.தி.மு.க.) கம்பம் தொகுதியில் தென்னை, திராட்சை சார்ந்த தொழிற்பேட்டை உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து, விவாதிக்க என்று கேட்டிருக்கிறார். தென்னையானாலும் திராட்சையானாலும் அதற்கான தொழிற் பேட்டையை கம்பத்திலே உருவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

இளவழகன் (பா.ம.க. ஆர்க்காடு) – தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை சீரமைக்க, முதலீட்டாளர்களுக்கு உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளை களைந்து, முதலீட்டை ஊக்கப்படுத்த வேண்டிய நடவடிக்கையையும் தொழிற்கட்டுப்பாடுகளை நீக்கியும், மேலும் வட்டி வீதங்களைக் குறைத்தும், தொழிலாளர் துறை சீர்திருத்தமும் தகுந்த எரிசக்தியை நிர்ணயித்தும், தொழில் முறையான விரயத்தை குறைத்தும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க பொதுத்துறை மற்றும் தனியார்துறை கூட்டாக இணைந்து செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று வெட்டுத் தீர்மானத்தில் கேட்டிருக்கிறார். ஒரு தொழில் கொள்கை வகுக்கப்பட இருக்கிறது கூடிய விரைவில். அந்த தொழிற் கொள்கையிலே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய ஷரத்துக்களில் இது ஒன்று என்பதை நான் அவருக்கு உறுதியாக அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் டாக்டர் ஜெயகுமார் (காங்கிரஸ்) நாமக்கல் வாகன தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். எனவே இத்தொழிலை மேம்படுத்தவும் இப்பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவும், நாமக்கல்லில் வாகன தொழிற்பேட்டை ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று சொல்லியிருக்கின்றார். நாமக்கல்லில் நடைபெறுகின்ற வாகனத் தொழில் நாட்டிலே மிக முக்கியமான தொழில் – பெரும் போராட்டங்கள் அறப்போராட்டங்கள் அந்த வாகனங்கள் மூலமாக நடைபெற்றிருப்பதையும், அதைச் சமாளிக்க முடியாமல் சர்க்கார்கள் திணறியிருப்பதையும் நான்

அறிந்திருக்கின்றேன். எனவே, வாகன தொழிலுக்கு 'வாகான' பல சௌகரியங்களைச் செய்வதற்கு அரசு முனையும்.

விடியல் சேகர் (காங்கிரஸ்) சொல்லியிருக்கிறார், வெட்டுத் தீர்மானத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் புதிய தொழில் நுட்பங்களைத் தமிழகத்தில் துவங்கும் போது 80 சதவீத பணியாளர்கள் தமிழகத்திற்குள்ளும் அதுவும் குறிப்பாக தொழிற் சாலைகள் அமையும் இடத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்க என்று கேட்டிருக்கிறார். இது மிகமிக முக்கியமான ஒன்று – நான் ஹூண்டாய் தொழிற்சாலை அமைந்தபோதே அதை அமைத்திருக்கின்ற கொரியா நாட்டைச் சேர்ந்த அந்த அதிபர்களிடத்திலே, நான் முதலில் சொன்ன யோசனையே இந்த வட்டாரத்திலே உள்ள உள்ளூர்காரர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் – என்ற நிபந்தனையை விதித்துத்தான் அந்தத் தொழிற்சாலைக்கான அனுமதியே அளித்தேன் அப்போது. எனவே, இது ஒரு நல்ல நிபந்தனை. இந்த நிபந்தனை ஏற்கப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கோவை தங்கம் (காங்கிரஸ்) சின்கோனா மரத் தொழில் அந்தப் பகுதியிலே விரிவடைய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

சி.பி.ஐ.யைச் சேர்ந்த திருத்துறைப் பூண்டி உலகநாதன், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டி தொகுதியில் அரிசியைப் பயன்படுத்தி ஒயின் தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியம் குறித்து, அவர் வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார். அரிசியிலே ஒயினாம் – அதைத் தயாரிக்க வேண்டுமாம் – இப்போதுதான் அரிசியை கிலோ 2 ரூபாய் விலைக்கு கொடுப்பதற்கு படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒயினையும் தயாரித்துவிட்டால் என்ன ஆகும் என்பதையெல்லாம் தீரயோசித்து பரிசீலித்து அதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று நான் அவருக்குச் சொல்லிக் கொள்கின்றேன்.

# கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கை

ஜி.கே.மணி (பா.ம.க.) மேட்டூர் – தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனே வழங்க வேண்டிய அவசியம் குறித்து வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அவர் வேலையை அவர் பார்க்கிறார். உடனடியாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அரசு அதற்கான நடவடிக்கையை கடுமையாக எடுக்கும் என்று நான் உறுதி கூறிக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஞானசேகரன் (காங்கிரஸ்) வேலூர், திருப்பத்தூர், ஆம்பூர், செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை சக்கைகளிலிருந்து, மின்சாரம் தயாரிக்கின்ற திட்டத்தை செயல்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க – அவர் சக்கையைக்கூட பேசாமல் விடமாட்டார் – (சிரிப்பு) அதையும் தினந்தோறும் இந்த அவையிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அவர் கேட்டு இல்லை என்று சொல்ல முடியுமா? எனவே அதைப்பற்றியும் நிச்சயமாக கவனம் செலுத்தப்படும்.

ரவிக்குமார் – (விடுதலைச் சிறுத்தை) – இந்திய தொழில்நிறுவனங்களின் கூட்டமைப்போடு சி.ஐ.ஐ. இணைந்து தொழில்திறன் மேம்பாட்டு (Skill Development) மையங்களை மாவட்ட அளவில் உருவாக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று கேட்டிருக்கிறார்.

நான் மீண்டும் சொல்கின்றேன் – தொழிற் கொள்கை விரைவில் வகுக்கப்படவிருக்கிறது. அப்போது இது கவனத்தில் கொள்ளப்படும் என்பதை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி)

டி.ஜெயக்குமார் (அ.தி.மு.க.) ராயபுரம் பேசும் போது, வடசென்னையில் உள்ள எண்ணூர் பகுதி சிறப்பு பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டு இதுவரை இப்பகுதியில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. அம்மா காலத்தில் கூடவா ? (பலத்த சிரிப்பு) கவலைப்படாதீர்கள். அமைத்து விடலாம். வேலை வாய்ப்பைப் பெருக்குகின்ற வகையில் வடசென்னை மக்கள் பெரிதும் பயன்படுகின்ற வகையில், இப்பகுதியில் Special Economic Zone உடனடியாக அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று கேட்டிருக் கிறார். நிச்சயமாக அதுவும் கவனிக்கப்படும். அவர் மகிழத்தக்க அளவுக்கு.

செங்கற்பட்டு ஆறுமுகம் (பா.ம.க.) திருக்கழுக்குன்றம் வட்டத்தை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், 25 சதவிகிதம் மானியம் வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க கேட்டிருக்கிறார். அதுவும் பரிசீலிக்கப்படும்.

செந்தில் பாலாஜி – (அ.தி.மு.க.) – கரூர். கரூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் டி.என்.பி.எல். தொழிற்சாலையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்மீது முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்) காவல்துறையில் பதிவு செய்யப்பட்டாலே, அவரைப் பணிக்கு வரவிடாமல், நிறுவனம் தடை செய்துவிடுகின்றது. இந்த முறையை மாற்றி, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் மட்டுமே பணி செய்வதை தடை செய்ய வேண்டும் என்பது குறித்து விவாதிக்க என்று கேட்டிருக்கிறார்.

இந்தக் கொள்கையிலே எந்த விதமான மாற்றமும் இல்லை. ஒருவர்மீது குற்றம் சுமத்திவிட்டதாலேயே அவர் குற்றவாளியாக ஆகிவிடமுடியாது. தொழிலாளர் என்பதற்காக அவரை ஏறி மிதிப்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே குற்றம் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே பணித்தடை

வேண்டுமே தவிர, குற்றம்சாட்டிவிட்டு அவர் தகுதியில்லை என்று விரட்டிவிட எந்த தொழிலாளியையும் அப்படிப் பழிவாங்க இந்த அரசு, இடம் தராது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சண்முகவேலு (அ.தி.மு.க.) உடுமலை – வங்கிகளில் வட்டி குறைந்துள்ள நிலையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திலும் கடன் கொடுப்பதில் உள்ள நிபந்தனைகளை எளிமையாக்கி, வட்டியை குறைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று ஒரு முக்கியமான விஷயத்தை அவர் வெட்டுத் தீர்மானத்திலே முன் மொழிந்திருக்கிறார். இது பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி செல்வி இராமஜெயம் (அ.தி.மு.க.) புவனகிரி – புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஒன்றியப் பகுதியில் அதிகம் பயிரிடப்படும் மலர்களை கொண்டு அந்தப் பகுதியிலே வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று கேட்டிருக்கின்றார்.

பொள்ளாச்சி ஜெயராமன் (அ.தி.மு.க.) பொள்ளாச்சி தொகுதியில் வேலை வாய்ப்பை உருவாக்க, ஒரு பெரிய தொழிற்சாலையை பொள்ளாச்சியிலே ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அவருடைய குறை தீர்க்கப்பட பொள்ளாச்சி தொழிற்சாலை ஒன்றினை விரைவிலே பெறும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

மயிலாடுதுறை ராஜ்குமார் (காங்கிரஸ்) – இராஜ பாளையம் திருமதி சந்திரா (அ.தி.மு.க.) ஆகியோர் இணைத்துள்ள கோரிக்கைகளும் கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்து 285 வெட்டுத் தீர்மானங்களுக்கும் விளக்கம் அளிக்கவில்லையே

என்று யாரும் என்மீது வருத்தப்படாமல், பொறுக்கியெடுத்து சிலபல வெட்டுத்தீர்மானங்களுக்கு மாத்திரமே விளக்கம் அளித்தேன் என்கிற வகையிலே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

பிறகு பொதுவாக இந்த தொழில் மானியத்தைப் பற்றி பேசும்போது, நமது நாட்டினுடைய சமுதாய பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் வேளாண்மை எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு இணையான முக்கியத்துவம் தொழிலுக்கும் உண்டு. வேளாண்மை உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் கைகோத்துச் செல்வதற்கான பாதையே இந்தியத் திருநாடு அகிலத்தின் முன்னணி வரிசையில் இடம்பெறுவதற்குப் பண்பட்ட பாதையாகும்.

18ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்டு வரும் தொழிற் புரட்சி புதிய, புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. அதனால் பொருள்களை உற்பத்திச் செய்யும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் தோன்றின. இதன் விளைவாக உலக முழுவதும் சமூகப் பொருளாதார நிலைகளில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய முற்போக்கான மாற்றங்களால் ஊரகப் பகுதிகளில் இருந்து வாழ்வு ஆதாரத்திற்கான வாய்ப்புகளைத்தேடி நகர்ப் பகுதிகளுக்கு ஏற்பட்ட குடிபெயர்ப்புகள் நகர்ப் பகுதிகளில் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு காரணமாயின. நிலக்கரி, பெட்ரோல், வாயு போன்ற எரிபொருள்கள் தொழில் வளர்ச்சியிலே உந்துதல் சக்திகளாக விளங்கி வருகின்றன. இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பின்னர் 56ல் மத்திய அரசு வகுத்தளித்த தொழில் கொள்கை – தொழில் புரட்சியின் நன்மைகளை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டிருந்தது. தொடக்க நிலையில் இரும்பு, கனரகத்தொழில்கள், மின்உற்பத்தி ஆகிய துறைகளில் வளர்ச்சியை உருவாக்குவதே குறிக்கோளாக இருந்தது.

அதன்பிறகு தகவல் தொழில்நுட்பம் மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியது. மனித இயக்கத்தின் அனைத்து முனைகளிலும் கணினி நுழைந்ததால், தகவல் தொழில்நுட்பப் புரட்சி தொழில்துறையில் முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு பல்வேறு வகையான மாற்றங்களை உருவாக்கியது. அறிவு சார்ந்த கணினிப் புரட்சி மனித வரலாற்றில் புதிய ஆனால் புத்துணர்ச்சி மிகுந்த அத்தியாயத்தை தொடங்கி வைத்தது. நமது சமுதாய பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலும் அங்கிங் கெனாதபடி, எங்கெங்கும் கணினி ஊடுருவி யாரும் மறுக்க முடியாத தாக்கத்தை உண்டாக்கி வருகிறது. இதனால், உலகமே சுருங்கி, உலகம் சேர்த்து குவித்து வரும் அறிவை. கடைக்கோடியிலே உள்ள கிராமங்களிலே இருந்து கொண்டே பெற்று, உயரும் உன்னதமான வாய்ப்பு இன்றைய தலைமுறைக்கு ஏற்பட்டிருப்பது பெருமைப்படத் தக்க முன்னேற்றமாகும். தொடர்ந்து நிகழ்ந்து வரும் இந்தப் புரட்சியின் அடுத்தக்கட்டமாக, உயிரி இயல் தொழில் நுட்பப் புரட்சி (Bio Technology Revolution) ஏற்படும் என்று அறிவியல் அறிஞர்கள் கணித்திருக்கிறார்கள்.

உயிரி இயல் தொழில் நுட்பப் புரட்சி முழுமையடையும் பொழுது மானுட வாழ்க்கை முறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். வாழ்க்கைத் தரத்தில், வாழும் வயது பெருகுவதில், நோய்க் கட்டுப்பாட்டில், உணவுப் பொருள்கள் உற்பத்தியில், உயிரி இயல் தொழில் நுட்பப் புரட்சி பெரும் பங்காற்றும் என்பது நிபுணர்களின் எதிர்பார்ப்பு.

தொழிற்சாலைகள் உருவாக, தொழில் வளம் பெருக முதன்மையாக தேவைப்படுபவை நிலமும் அதனையொட்டி அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் ஆகும். இதனை கருத்தில் கொண்டுதான் தி.மு.க ஆட்சியில் 71 ஆம் ஆண்டு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே தான் அன்றைக்கு சிப்காட் (State Industries Promotion Corporation of Tamil Nadu) என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கினோம்.

இன்றைக்கு பேசப்படுகிற சிப்காட் இருக்கிறதே தமிழகமெங்கும் இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற – தொழில் வளத்தை உருவாக்கி இருக்கின்றதே அந்த சிப்காட் நிறுவனத்தை யார் முதலில் கொண்டு வந்தார்கள், யார் பின்னால் கொண்டு வந்தார்கள், என்று தொழிற் சாலைகளுக்கு எல்லாம் இன்றைக்கு நாம் சண்டை போட்டுக் கொள்கிறோமே, நான் அவர்களுக்குச் சொல்கின்றேன், அதற்கு முன்பு சிப்காட் போன்ற பெரிய அளவிலே இல்லாத சிறுசிறு அமைப்புகள், பார்க்குகள், பூங்காக்கள் இருந்தன என்றாலும் கூட, பெரிய அளவில் இராணிப்பேட்டையிலும், ஒசூரிலும் சிப்காட் என்ற நிறுவனத்தை அமைத்தது 71 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மிகுந்த அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களில் ஒன்றுதான் இராணிப்பேட்டை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இராணிப்பேட்டையில்தான் தமிழ்நாட்டிலே முதல் தொழில் வளாகம் அமைந்தது என்பதை எடுத்துக்கூற விரும்புகின்றேன். எப்படி தி.மு.கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் சிறுதொழில் வளர்ச்சிக்கு காமராஜர் போன்ற பெருந்தலைவர்கள் ஆட்சியில், பக்தவத்சலம் போன்றவர்களுடைய ஆட்சியில், சுப்பிரமணியம் போன்றவர்கள் நடத்திய ஆட்சியில் கிண்டி தொழிற்பேட்டையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையும் ஆதாரத் தளங்களாக அமைந்ததோ, அதைப்போல பெரிய தொழில் வளர்ச்சிக்கு கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட சிப்காட் வளாகங்களே ஆரம்பத் தளங்களாக அமைந்தன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இராணிப்பேட்டையிலும், ஒசூரிலும், சிப்காட் தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டன.

இராணிப் பேட்டையிலே 279 ஏக்கர் பரப்பளவில் தொழில் வளாகம் அமைக்கப்பட்டு அதிலே 168 கோடி ரூபாய் முதலீட்டில், 107 புதிய தொழில்கள் துவங்கப்பட்டன.

அதற்கடுத்து ஒசூரில் 1236 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாட்டில் இரண்டாவது தொழில் வளாகம் கழக அரசால் அமைக்கப்பட்டது. அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. மூன்றாம் கட்டமாக 97ல் இராணிப்பேட்டை சிப்காட் நிறுவனத்திற்கு 491 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மேலும் பல தொழிற்சாலைகள் வளர்வதற்கு அந்த வளாகம் விரிவாக்கம் செய்யப்பட்டது. 97 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் ஒசூர் சிப்காட் வளாகத் திற்கு மேலும் 240 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதில் 64 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன.

ஏறத்தாழ 6 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற்றார்கள்.

இப்படி தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக இராணிப்பேட்டை, ஒசூர் மட்டும் அல்லாமல், கழக ஆட்சியில் கடலூரில் 1198 ஏக்கர் நிலப்பரப்பில் 97 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், இருங்காட்டுக்கோட்டையில் 1830 ஏக்கர் நிலப்பரப்பில் 96 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், தூத்துக்குடியில் 437 ஏக்கர் நிலப்பரப்பில் 96 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும், திருப்பெரும்புதூரில் 2460 ஏக்கர் நிலப்பரப்பில் 97 ஆம் ஆண்டில் ஒரு தொழில் வாளகமும், ஒரகடத்தில் 2043 ஏக்கர் நிலப்பரப்பில் 97 ஆம் ஆண்டு ஒரு தொழில் வளாகமும், சிறுசேரியில் 756 ஏக்கர் நிலப்பரப்பில் 98ஆம் ஆண்டில் ஒரு தொழில் வளாகமும் என பல்வேறு இடங்களிலும் சிப்காட் தொழில்வளாகங்கள் அமைக்கப்பட்டன.

என்ன தொழில், யார்? யார் என்பதல்ல; அதெல்லாம் வந்து இறங்குவதற்கு ஏற்ற இடங்கள், யாரால் எப்பொழுது எந்த

ஆட்சியால் அமைக்கப்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது. இவ்வாறு கழக ஆட்சிக்காலங்களில் தமிழ்நாட்டில் தொய் வில்லாத தொழிற்வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலியதோடு, பெருமளவான வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டன.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டை கூற வேண்டுமே யானால், இருங்காட்டுக்கோட்டையிலே ஜே.பி.எம். சங்வூ லிமிடெட் தொழிற்சாலை, ஜெ.கே.எம். டெரிம் தொழிற்சாலை, ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மாசூட்டிக்கல் தொழிற்சாலை, சிட்டிசன் வாட்ச் தொழிற்சாலை, சாம்க்ரீவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ட்ராக்டர் தொழிற்சாலை, ஜி.எம்.ஆர். வாசவி தனியார் மின் உற்பத்தித் திட்டம், மட்சுசிடா ஏர் கண்டிஷனர் தொழிற்சாலை, ரினால்ட்டஸ் பால் பென் தொழிற்சாலை, செம்பவாங் ஸ்ரீராம் பொருள் விநியோகத் தொழிற்சாலை, மார்க்யூப் இந்தியா காகித அட்டை இயந்திரம் தயாரிக்கும் தொழிற்சாலை, ஆப்டிக் பைபர் டெலிகாம் கேபிள்ஸ் தொழிற்சாலை.

அக்டோபர் மாதம் 2000 ஆம் ஆண்டு இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம், அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பற்றி வெளியிட்ட அறிக்கை ஒன்றில், தமிழ்நாடு 145.62 குறியீட்டு எண்களைப் பெற்று முதல் நிலையிலே இருந்தது. கர்நாடகம் 106.12 குறியீடு. ஆந்திரம் 104.01 குறியீடு. அதைப்போல அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மாநகரங்களுக்குக் இடையேயான மதிப்பீட்டில் அன்றைக்கு 2000–ம் வருஷத்திலே சென்னை மாநகரம் 472.48 குறியீட்டு எண்களைப் பெற்று முதல் நிலையிலே இருந்தது. ஐதராபாத் 153 குறியீட்டு எண். பெங்களூர் 100.28 குறியீட்டு எண் பெற்றிருந்தன. 89– 91 காலகட்டத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு கழக அரசு அளித்த உறுதியான ஊக்கத்தின் காரணமாக தமிழ்நாடு இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்திருந்தது. 91–96 காலகட்டத்தில்

நடைபெற்ற ஆட்சியில் தமிழ்நாடு தொழில்வளர்ச்சி யில் பின்தங்கி ஐந்தாம் இடத்திற்கு இறங்கி இருந்தது. இதை நான் யாரையும் தாக்குவதற்காக அல்ல; தொழில் வளர்ச்சியினுடைய அன்றைய நிலவரத்தைக் கூறுவதற்காக குறிப்பிடுகின்றேன். எல்லோரும் சேர்ந்துதான் தொழில்வளத்தை தமிழகத்திலே பெருக்க வேண்டும் என்ற அந்த ஊக்கத்தை உற்சாகத்தை, ஆர்வத்தை, அக்கறையை பெறவேண்டும் என்பதற்காக சொல்கின்றேன்.

1994–95ல் 8.7 சதவீகித அளவிற்கு இருந்த தமிழ் நாட்டின் தொழிற்வளர்ச்சி கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக 99–2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி 15.02 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். கழக அரசு தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்குக் காட்டிய அக்கறைக்கும் உயர்ந்த செயல்பாட்டிற்கும் அடையாளமாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டு மேயானால், இங்கே உறுப்பினர்கள் அப்பாவு குறிப்பிட்டதைப் போலவும் ரெங்கநாதன் குறிப்பிட்டதைப்போலவும் 98 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரே விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கிய ஒற்றை சாளர முறையை (Single Window System) சுட்டிக்காட்ட வேண்டும். இதை முதல்முதலாக அறிமுகப்படுத்தியதே தி.மு.கழக ஆட்சிதான். அதற்கு முன்பெல்லாம் தமிழ்நாட்டிலே ஒரு தொழில் தொடங்க வேண்டு மென்றால், உள்ளாட்சி மன்றத்தினுடைய அனுமதி, மாசுக்கட்டுப் பாட்டு வாரியத்தின் சுற்றுச் சூழலுக்கான அனுமதி, நில ஒதுக்கீட்டிற்கான அனுமதி, நில வகைப்பாட்டை மாற்றுவதற்கான அனுமதி, நகர்ப்புற நில உச்ச வரம்பிலே இருந்து விலக்கு பெற அனுமதி, தேவையான தண்ணீருக்கான அனுமதி, மின்சாரத்திற்கான அனுமதி, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய அனுமதி என்று எட்டு வெவ்வேறு வகையான அனுமதிகளைப் பெற வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இந்த

எட்டையும் ஒழித்துவிட்டு, ஒரே அனுமதிபெற்றால் போதும். அதிலே எல்லாம் அடங்கும் என்கின்ற அந்த ஒற்றைச் சாளர முறையை தொழில் துறையிலே பெரிய முன்னேற்றத்திற்காக கொண்டு வந்ததே தி.மு.கழக ஆட்சிதான். ஆனால், இப்பொழுது அந்த நிலைமைகளெல்லாம் இல்லை. இந்த ஆட்சியில் புதிதாக நாங்கள் பொறுப்பேற்ற நேரத்தில், அந்த ஒற்றைச் சாளர முறையினுடைய தொடர்புகள் இல்லாத ஒரு சூழ்நிலை. இது எப்படி இருந்தது என்றால், பரமபதம் படத்தில் ஏணியிலே ஏறிய காட்சியும், பாம்பின் தலையிலே மாட்டிய காட்சியுமாக பரமபதம் படம்போல் தமிழ்நாடு ஆகி விட்டது. மறுபடியும் தாயம் போட்டு ஏணியிலே ஏற வேண்டும். ஏறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

தொழில் நேயமிக்க அணுகுமுறையும், தொழில் முன்னேற்றத்தில் ஈடுபாடும் கொண்டுள்ள தி.மு.கழக அரசின் மீது நம்பிக்கை வைத்து தொழில் முனைவோர் பேரார்வத்துடன் தமிழகத்திற்கு கொண்டு வர கருதியுள்ள முதலீடுகளை வெளிப்படையான முறையில் வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் சலுகைகளையும் காலதாமதமின்றி உரிய நேரத்தில் வழங்கி மாநில தொழில் வளர்ச்சிக்கு மீண்டும் வழியமைத்துக் கொடுத்திடும் வகையில், தொழில் துறை – தகவல் தொழில் நுட்பத்துறை ஆகியவை தொடர்பான முக்கியமான சில அறிவிப்புகளை இப்போது வெளியிட விரும்புகிறேன்.

1. சிப்காட் நிறுவனத்தின் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்கள் தொழில் மையங்களாக உருவெடுத்துள்ளன. தினந்தோறும் தமிழகத்தில் தற்போது புதிய தொழில் முதலீட்டுக்கான திட்டங்கள் வந்த வண்ணம் உள்ளன. புதிய முதலீடுகளையேற்று புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு தேவைப்படும் நிலங்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்து வருவதால் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில்

பூங்காக்களை விரிவாக்கம் செய்ய இந்த அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளது.

2. ஹூண்டாய், போர்டு, மிட்சுபிஷி, பி.எம்.டபிள்யூ, அசோக் லேலண்ட் போன்ற பெரும் மோட்டார், உற்பத்தி நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிற்சாலை கள் அமைத்ததன், காரணமாக இது யார்யாருடைய ஆட்சி என்றெல்லாம் கூற விரும்பவில்லை. இந்த நிறுவனங்கள் தமிழகத்திலே மோட்டார் உற்பத்தி நிறுவனங்களை ஏராளமாக அமைத்ததின் காரணமாக சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் (Detroit) என்று வர்ணிக்கப்படுகிறது. இந்தியாவின் மோட்டார் உதிரி பாகங்கள் உற்பத்தியில், 35 சதவிகிதம் சென்னையில் உற்பத்தியாகின்றன. இந்த உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்களில் பலர் பெரும் ஏற்றுமதியாளர்களாகவும் உள்ளனர். இத் துறையில் புதிய முதலீடுகளின் மூலமாக ஏற்படக் கூடிய தேவையை நிறைவு செய்ய ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் மோட்டார் சிறப்பு பொருளாதார மண்டலம் (Automotive Special Economic Zone) ஏற்படுத்தப்படும்.

3. மிகப்பெரிய சுற்றுலாத் தலமாகவும், கோயில் நகரமாகவும் விளங்கிடும் மதுரையில் நீண்டகாலமாக பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அவற்றுக் கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் மதுரை அருகில் சிப்காட் நிறு வனம் மூலமாக ஒரு புதிய தொழில் பூங்கா அமைக்கப் படவுள்ளது.

4. தோல் பதப்படுத்துதல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தமிழகத்தின் தொழில் துறையில் நீண்டகாலமாக ஒரு முக்கிய பங்கை வகித்து வருகிறது. இத்துறையால் ஏற்படும் சுற்றுச் சூழல் மாசினை சரி செய்யும் வகையில் ரூ.115 கோடி மதிப்பில் 11 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ரிவெர்ஸ் ஆஸ்மாசிஸ்

(Reverse Osmosis) சாதனங்களை அமைக்க நிதியுதவி கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் நான் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

தோல் பதப்படுத்தும் மற்றும் தோல் பொருள் உற்பத்தி வளாகம் ஒன்று அமைக்க சென்னை அருகில் சிப்காட் நிறுவனம் மூலமாக 250 ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தோல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும்.

## புகளூர் செய்தித் தாள் காகித நிறுவனம் ரூ.650 கோடியில் நவீனப்படுத்தப்படுகிறது

5. கரூர் மாவட்டம், புகளூரில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 2,30,000 மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி ஆகி வருகிறது. இந்த உற்பத்தியை அதிகரிப்பதற்காக தற்போது காகிதம் தயாரிக்கும் இயந்திரத்தை நவீனப்படுத்தி விரிவாக்கம் செய்வதற் கான திட்டத்தை மொத்தம் ரூ.650 கோடியில் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தினால் ஆண்டொன்றிற்கு கூடுதலாக 1,20,000 மெட்ரிக் டன் உற்பத்தித்திறன் கொண்ட ஒரு புதிய அதி நவீன தொழில் நுட்பத்துடனான காகித இயந்திரம் அமைக்கப்படவுள்ளது. மேலும் இந்த நிறுவனத்தின் சார்பில் ரூ.30 கோடி முதலீட்டில், ஐந்து புதிய காற்றாலைகளை நிறுவி, 6.25 மெகாவாட் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

6. சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி (Cogeneration) செய்வதன் மூலம்அந்த ஆலைகளின் செயல்திறன் அதிகரிப்பதுடன் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கும் உதவுகிறது. கள்ளக்குறிச்சி இரண்டாவது கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.13.50 கோடி செலவில் 6 மெகாவாட் திறன் கொண்ட ஒரு இணை மின் நிலையம் அமைக்கப்படும்.

7. தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றும் வகையில் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 6 கோடி ரூபாய் செலவில் எத்தனால் எனும் எரிபொருள் உற்பத்தி நிலையம் அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறைகளில் அமையும் முதல் எத்தனால் உற்பத்தி நிலையம் இதுவாகவே இருக்கும்.

8. பெரம்பலூர் மாவட்டம் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (டிட்கோ) இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிற் பூங்காவுடன் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினையும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தப் பகுதிக்கு படிப்படியாக ரூபாய் 5000 கோடி அளவிலான முதலீடும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

9. தமிழகத்தில் உள்ள இயற்கை எரிவாயு பெரும் பகுதி காவேரிப்படுகை பகுதியில் காணப்படுகிறது. புதிய ஆய்வு தொழில் நுட்பத்தின் மூலமாக அந்த இருப்பை பயன்பாட்டிற்குக் கொண்டு வர இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா கோதாவரிப் படுகையிலும் இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இக்குறிக்கோளை அடையும் வகையில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஒரு புதிய இணைத்துறை நிறுவனத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அமைக்கும். இப்புதிய நிறுவனம் தமிழகம் முழுவதும் தேவையான குழாய் கட்டமைப்பை அமைத்து இயற்கை எரிவாயு விநியோகத்

தொகுப்பினை (Natural gas distribution network) உருவாக்கும். அரசின் இப்புதிய முயற்சி இம்மாநிலத் தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதோடு தமிழகத்தின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கும் மாநில அரசின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும்.

10. தற்போது பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு எடுத்துச் செல்லும் லாரி வாடகையை கரும்பு விவசாயிகளே செலுத்துகின்றனர். பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக உள்ள பகுதிகளுக்கான லாரி வாடகையை இந்த ஆலைகளே ஏற்றுக் கொள்கின்றன. தேர்தல் அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ள மற்றொரு வாக் குறுதியை நிறைவேற்றுகின்ற வண்ணம், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் ளிருந்து கொண்டு வரப்படும் கரும்புக்கான லாரி வாடகையை வரும் அரைவைப் பருவத்திலிருந்து சர்க்கரை ஆலைகளே ஏற்றுக் கொள்ளும். இதனால் கரும்பு விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 40 கோடி ரூபாய் பயன் கிடைக்கும்.

11. காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகள் முக்கியமான தொழில் மையமாக உருவாகி வருகிறது. இதனால், தொழிற் சாலைகளின் வசதிக்காக சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, 24 கிலோ மீட்டர் நீள சிங்கபெருமாள் கோவில் திருப்பெரும்புதூர் சாலை மற்றும் 20 கிலோ மீட்டர் நீள வண்டலூர் வாலாஜாபாத் சாலை ஆகிய சாலைகளின் முக்கிய பகுதிகளை ஆறு வழித்தடச் சாலையாகவும், பிற பகுதிகளை நான்கு வழித்தடச் சாலையாகவும் சுமார் 300 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்தும் திட்டத்தையும் செயல்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

தகவல் தொழில் நுட்பவியல் துறை அறிவிப்புகள்

1. தகவல் தொழில் நுட்பத் துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பலன்களை ஒன்று திரட்டி – அத்துறை மேலும் வேகமாகவும் பயனுள்ள வகையிலும் வளர்ச்சி அடைவதற்கு புதிய தகவல் தொழில் நுட்பக் கொள்கை ஒன்று வகுத்து அறிவிக்கப்படும்.

2. 4.7.2000 அன்று டைடல் தகவல் தொழில் நுட்பப் பூங்கா தொடங்கி வைக்கப்பட்டபோது அறிவிக்கப்பட்டபடியும், தொடர்ந்து தேர்தல் அறிக்கை யிலும், நிதி நிலை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடியும் – இரண்டாவது டைடல் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்று சென்னை தரமணியில் நிறுவப்படும்.

3. தமிழக அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில் நுட்பப் பூங்காக்கள் நிறுவனமும், தனியார் துறையும் இணைந்து கோவையில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும்.

4. சென்னையில் மட்டும் பெரிதும் மையம் கொண்டுள்ள தகவல் தொழில் நுட்பப் புரட்சி, தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகரங்களிலும் பரவி பலனளித்திடும் வகையில் மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

5. மத்திய அரசு அறிவித்துள்ள – உலகத் தரத்திலான தகவல் தொழில் நுட்பம், வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றுக்கான இந்தியக் கல்வி நிறுவனம் சென்னைக்கு அருகே நிறுவப்படும்.

6. தகவல் தொழில் நுட்பத் துறையில் வெகுவான முதலீடுகளை ஈர்ப்பதற்கான வழிகளை வகுத்துச் செயல்படுத்திட முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, இடைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் விடப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழு (I.T. Task Force) ஒன்று மீண்டும் உருவாக்கப்படும்.

7. மின்னணு ஆளுமை (e-governance) நகரங்களில் உள்ள மக்களைப் போலவே கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பயன் அளித்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு தமிழகம் ஒரு முன்னோடி மின்னணு ஆளுமை மாநிலமாகத் திகழ்ந்திடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. தற்பொழுது சென்னையில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கென தனியே சொந்தமாக கட்டிடம் அமைவதற்கேற்ற நிலமும், ஒரு கோடி ரூபாய் நிதியும் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

9. முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டு, இடையில் தொய்வு ஏற்பட்ட, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை (I.T.Expressway) திட்டத்தின் முதற்கட்டமாக பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி முதல் சிறுசேரி வரை உள்ள சாலையை உலகத் தரம் வாய்ந்த ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகள் 205 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இச்சாலையினை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையுள்ள சுமார் 25 கிலோ மீட்டர் நீள சாலையை ஆறு வழித் தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இனிய இந்த அறிவிப்புகளோடு இந்த அவையிலே அறிவித்த அருமையான கருத்துக்கள், அவைகள் எதிர் கருத்துக்களானாலும் ஆதரவுக் கருத்துக்களானாலும் அனைத்தையும் ஒன்றாகக் கருதி அதன்படி தொழில்துறை மானியத்திலே நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று கூறி இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

